
Illustration: Shinod Akkaraparam

# வணிகத்தமிழ்



- முன்னுரை
- வணிகம்-சொற்பொருள் விளக்கம்
- விற்பனைக் கூடங்களின் பெயர்கள்
- பண்டமாற்று முறை
- ஏற்றுமதியும் இறக்குமதியும்
- சுங்கமும் சோழர் இலச்சினையும்
- வணிகர்களின் நடுவுநிலைமை
- முடிவுரை



# முன்னுரை

- தமிழர்களின் பெருமையையும் மனித வாழ்க்கையின் மாண்பையும் இலக்கியங்களாகச் சங்க இலக்கியங்கள் விளக்குகின்றன.
- இலக்கைக் காட்டுவது இலக்கியம். இலக்கு-திசை. மக்கள் எத்திசையில் செல்லவேண்டும் என்பதைக் காட்டுவதே இலக்கியம் ஆகும் என்பார் சாமி சிதம்பரநாதன்.



# வணிகம்

- உற்பத்திப் பொருட்களை வாங்கி விற்கும் தொழிலைக் குறிக்க வணிகம் மற்றும் வாணிகம் வியாபாரம் ஆகிய சொற்கள் கையாளப்படுகின்றன.
- லாப நோக்கில் பொருட்களை வாங்கி விற்கும் தொழில் என க்ரியாவின் தற்காலத் தமிழகராதியும் செட்டு, வியாபாரம் என்று கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதியும் வணிகம் என்ற சொல்லுக்குப் பொருள் தருகின்றன.

# விற்பனைக் கூடங்களின் பெயர்கள்

- விற்பனைப் பொருட்கள் பண்டம், பண்ணியம் என்று அழைக்கப்பட்டன.
- விற்பனை செய்யும் இடங்களைச் சங்க இலக்கியங்கள், ஆவணம் நியமம் கடை அங்காடி ஆகிய சொற்களால் குறிப்பிடுகின்றன.
- கடை என்ற சொல் இன்றும் வழக்கில் இருப்பதன் மூலம் தமிழ்மொழியின் தொன்மையினையும் இலக்கியத்தின் தொன்மையினையும் அறிய உதவுகின்றன.

# பண்டமாற்று முறை

- சங்க காலத்து மக்கள் பிறரிடமிருந்து பெற்று வாழ்ந்து வந்தார்கள்.
- சங்க காலத்து மக்களின் தொடக்க கால வணிகம் பண்டமாற்று முறைகளின் அடிப்படையிலேயே நடைபெற்றது.
  - **நெல்லும் உப்பும் நேரே ஊரீர்**
    **கொள்ளீரோ எனச்சேரி தொறும் நுவலும்**

    (அகம் 390)



**வலைவல் பாண்டமகன் வாலெயிற்று மடமகள்**
**வராஅல் சொரிந்த வட்டியுள் மனையோள்**
**யாண்டுவழி வெண்ணொல் நிறைக்கும்**

(ஐங் - 48)

- இப்பண்டமாற்று முறை ஈகைக் குணத்திற்கு அடித்தளமிட்டது. எப்பொழுது இம்முறைமாறிப் பண்டத்தைப் பணமாக்கிக் சேமிக்கும் பழக்கம் வந்ததோ அன்றே ஈகைக்குணமும் படிப்படியாகக் குறையத் தொடங்கியது என்பது அறியப்படுகின்றது.

# ஏற்றுமதியும் இறக்குமதியும்

- சோழ நாட்டின் வளத்தையும், காவிரிப் பூம்பட்டினத்தின் வணிகச் சிறப்பையும் எடுத்துக் கூறும் பட்டினப் பாலை இன்றைய வணிகர்களுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்குகின்றது.
- “வான் முகந்த நீர் மலைப் பொழியவும்
  மலைப் பொழிந்த நீர் கடல் பரப்பவும்
  மாரி பெய்யும் பருவம் போல

என்ற வரிகள் தெரிவிக்கின்றன.



- பல நாடுகளில் மொழிகள் தோன்றுவதற்கு முன்பும் பல மொழிகளுக்குப் பேச்சு வழக்குதவிர எழுத்து வழக்கு இல்லாத காலத்தும் பலர் காட்டுமிராண்டிகளாய்த் திரிந்த நேரத்தும் தமிழர் தரணி போற்றும் வாணிகத்தைச் செய்தனர் என்பதை வணிக வரலாறுகளாய் மாணவர்கள் மனதில் பதியவைத்துக் கொள்ளுதல் வேண்டும்.
- மதிநிறைந்த மலி பண்டம்

  பொதி மூடைப் போர் ஏறி

  என்று பட்டினப்பாலை கூறுகின்றது. மூடை என்பதற்கு மூட்டை என்பது பொருளாகும்.

- செல்லா நல்இசை அமரர் காப்பின்
  நீரின் வந்த நிமிர்பதிப் புரவியும்
  காலின் வந்த கருங் கறி மூடையும்
  கடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
  தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
  கங்கை வாரியும் காவிரிப் பயனும்
  ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
  (மேலது 184-195)

  என்று உள்நாட்டுப் பொருள்களும் ஈழம், அரேபியா, கடாரம் சீனம் யவனம் போன்ற நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட பொருள்களும் குவிக்கப்பட்டுள்ளதை விளக்குகின்றது.
- கிரேக்கர்களே யவனர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.




- நவரத்தின வகைகள்:

- வைரக் கற்கள்
- கோமேதகம்
- நீலாஞ்சனம்
- சந்திரகாந்தக் கல்
- வைடூரியம்
- நீலக்கற்கள்
- முத்துகள்
- ஆமையோடுகள்
- தந்தங்கள்
- முத்துச்சிப்பிகள்
- செம்மணிகள் ஆகும்



# தாவர வாசனைப் பண்டங்கள்

- இஞ்சி
- சாம்பிராணி
- கிழங்கு வகைகள்
- கற்றாழை வகைகள்
- இலவங்கம்
- பெருங்காயம்
- சர்க்கரை
- வாசனைத் தூப வகைகள்
- மிளகு
- திப்பிலி
- கடுக்காய் ஆகும்



- சாய வகைகள்:
  - அரக்கு
  - அவுரி
  - துணி வகைகள்:
  - மசுலின்
  - பஞ்சாடைகள்
  - பட்டுத் துணிகள்
  - பட்டு நூல்
  - பட்டாடைகள்



- உலோக வகைகள்:

➢ இந்திய இரும்பு எஃகு வகைகள்

- விலங்கு வகைகள்:

➢ புலி
➢ சிறுத்தை
➢ சிங்கம்
➢ பாம்பினங்கள்
➢ பாம்புகளின் தோல்கள்
➢ மான்
➢ புலித்தோல்கள்



# சுங்கமும் சோழர் இலச்சினையும்

- பண்டக சாலையிலிருந்து ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்குச் சுங்கம் விதிக்கப்பட்டுச் சோழர்களின் இலச்சினையாகிய புலிப்பொறி பொறிக்கப்பட்டதை

அருங்கடிப் பெருங்காப்பின்

வலியுடைய வல் அணங்கின் நோன்

புலிப் பொறித்து புறம் போக்கி

என்று பட்டினப்பாலை கூறுகின்றது.

# கொடியும் அடையாளச் சின்னமும்

- கடைத் தெருவில் அடையாளச் சின்னங்களாகக் கொடிகள் பறக்க விடப்பட்டன.
- உணவுப் பொருட்கள் விற்கும் கடைகள், இறைச்சி பொறிக்கும் முன்றில்கள், கள் விற்கும் கடைகள் ஆகியவற்றில் கட்டப்பட்ட கொடிகள் கதிரவனின் கதிர்களையும் தடைசெய்ததாகப் பட்டினப்பாலை கூறுகின்றது.

# வணிகர்களின் நடுவுநிலைமை

- வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
  பிறவும் தமபோற் செயின்

  என்ற குறள் பிறரையும் தன்போலவே நினைத்து நடுநிலையோடு வாணிகம் செய்யும் மரபைக் கூறுகின்றது.
- கொள்வது மிகையும் கொடுப்பது குறையுமாகாமல் ஒப்பநாடிச் செய்தல் என்று விளக்கம் கூறுகின்றார்.

- தம்முடைய பண்டங்களைப் பிறருடைய பண்டங்கள் போல ஒப்ப நோக்கும் உயர்பண்பே இவ்விலக்கியங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை.
- இலக்கியங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தை மட்டும் சுட்டிச் செல்வன அல்ல.
- காலகாலத்திற்கும் வாழ்க்கை அறங்களைத் தாங்கி செம்மாந்து நிற்பன.
- வணிகத்திலும் நேர்மை கடைபிடிக்கப்பட்டது என்றால் அறவாழ்வே சங்க வாழ்வு என்பதை உணர முடிகின்றது.

# முடிவுரை

- இன்றைய சூழலில் தாய்ப்பால் தவிர அனைத்திலும் கலப்படங்கள் நிறைந்துள்ளன.
- ஒரு பொருளை இன்னொருவருக்குக் கொண்டு செல்லும் பேருதவியைச் செய்யும் வணிகத்தில் பெருமை இருக்கிறது. கூடவே நேர்மையும் இருக்க வேண்டும்.
- உண்மையின் தேவையும் மிகவும் பின்பற்றப்பட வேண்டியுள்ளது என்பதை மக்கள் உணர்தல் வேண்டும்.

